بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 13/08/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**2021 யூ.கே ஆண்டு மாநாடு அருளுக்குரியதாகவும், வெற்றிகரமாகவும் நடை பெற்றது குறித்தும், அதனுடைய தாக்கங்கள் குறித்தும், அது நடைபெறும் போது பொழிந்த இறைவனின் அருள்களைக் குறித்தும் ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்புகள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ- أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ-

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

அல்ஹம்துலில்லாஹ்! கடந்த வெள்ளி அன்று - பிரிட்டன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு ஒரு வருட இடைவெளிக்குப் பிறகு நடைபெற்றது. இன்னும் சொல்வதென்றால், இரண்டு வருடங்களுக்குப் பிறகு ஆரம்பித்து - மூன்று நாட்கள் வரை தனது ஆன்மீக சூழலின் காட்சிகளை காட்டியவாறு கடந்த ஞாயிறன்று நிறைவடைந்தது.

கொரோனா தொற்றின் காரணமாக இவ்வருடமும் சூழ்நிலை சாதகமானதாக இருக்கவில்லை. ஆகவே, இவ்வருடமும் மாநாடு நடக்காது என நிர்வாகம் கருதியது. எவ்வாறிருப்பினும், இவ்வருடம் மாநாடு நடக்கும் இன்ஷா அல்லாஹ்! என்று அவர்களிடம் கூறப்பட்ட போது அவர்கள் ஆயத்தமாக ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் அவர்கள் உளப்பூர்வமாக ஆயத்தம் ஆகவில்லை. ஆகவே, ஒரு சந்தர்ப்பத்தில் நிர்வாகத்திடம் நான் கடினமாக பேச வேண்டிய நிலை வந்து விட்டது. அதாவது, மாநாடு நடக்குமா நடக்காதா என்ற சிந்தனையில் நீங்கள் மூழ்கியிருந்தால், இவ்வாறு மனமின்றி பணியாற்றிக் கொண்டிருந்தால், பிறகு நான் புதிய நிர்வாகத்தை நியமித்து விடுகிறேன் என்று கூறினேன். எனது இவ்விஷயம் அவர்களை அதிர்ச்சிக்கு ஆளாக்கி விட்டது. விரைவாக வேலைகள் ஆரம்பித்து விட்டன. கீழ்மட்டத்தில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள் முன்பே நிம்மதியிழந்திருந்தார்கள். உண்மையில் இந்த தொண்டர் படைதான் நிஜமான மக்கள் சக்தி ஆவர். மிக விரைவாக மாநாட்டின் ஏற்பாடுகளுக்காக எல்லா பக்கத்திலிருந்தும் தன்னார்வலர்கள் வர ஆரம்பித்து விட்டார்கள்.

மாநாடு சிறிய அளவில் நடக்கவிருந்தது. ஆகவே தன்னார்வலர்களிலிருந்து பணியாற்றுவதற்கு ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். எவர்களுக்கு தொண்டாற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லையோ அவர்களிடம் நான் கூறிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், உரிய காரணங்களின் காரணமாக உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய விருந்தினர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு இருந்தது; அது நிறைவேறிவிட்டது. அல்லாஹ் உங்களுடைய எண்ணத்தின் காரணமாக உங்களை கூலியில் இருந்து விலகி வைக்க மாட்டான்.

மாநாட்டிற்கு பிறகு வருகின்ற ஜுமுஆவில் - பணியாற்றிய ஊழியர்களுக்கும், தன்னார்வலர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கக் கூடிய வழக்கம் உள்ளது. உலகம் முழுவதிலிருந்தும் மக்கள் கடிதங்கள் எழுதி, அந்த தன்னார்வலர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்கள். மழை மற்றும் சேற்றின் காரணமாக பார்க்கிங்கில் இருந்து கார்களை எடுப்பதும் ஒரு மிகப்பெரும் பணியாக இருந்தது. சேற்றிலிருந்து காரை வெளியே

எடுப்பதற்காக ஊழியர்களும், தன்னார்வலர்களும் சுயமே சேற்றில் இறங்கி விடார்கள். MTA மூலமாக அதை முழு உலகத்திலுள்ள மக்களும் பார்த்தார்கள். நம்மவர்களும், அன்னியர்களும் இந்த ஆர்வமிகு தொண்டைக் கண்டு பெரும் வியப்பிற்குள்ளாகி இருக்கிறார்கள்.

பிறகு இவ்வாறே துப்புரவு துறை, உணவு பரிமாறக் கூடிய துறை, உணவு - ரொட்டிகள் போன்றவற்றை சமைக்கக் கூடிய துறை ஆகியவைகளும் உள்ளன. இவற்றைத் தவிர மிக முக்கியமான துறையான, கூடாரங்களை அமைத்துக் கொடுக்கக்கூடிய பணியாக இருக்கட்டும்! பாதைகளை அமைத்துக் கொடுக்கக்கூடிய பணியாக இருக்கட்டும்! அல்லது மாநாட்டினுடைய ஆரம்ப பணிகளாக இருக்கட்டும்! இப்பணிகளுக்காக தன்னார்வலர்கள் தொடர்ச்சியாக பல வாரங்களாக வந்து கொண்டிருந்தார்கள். அதேபோன்று இப்பொழுது வேலைகளை முடித்துக் கொடுப்பதற்காகவும் பல நாட்களாக வந்து கொண்டிருக்கிறார்கள். MTA வும் அதிக உழைப்புடன் நிகழ்ச்சிகளை உருவாக்கியிருந்தது. MTA ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகளை உலகிற்கு காட்டியதோடு மட்டுமின்றி, உலகின் பல்வேறு நாடுகளில் ஒன்று கூடி மாநாட்டை பார்த்தவர்களை, மாநாட்டுத் திடலில் நமக்கு காட்டியும் கொடுத்தது.

ஒரு வினோதமான சர்வதேச குடும்பத்தின் காட்சியை நமக்கு படம் பிடித்துக் காட்டியுள்ளது. ஆகவே, **இந்த சாதகமற்ற சூழலில் தன்னலமற்று பணியாற்றிய அனைத்து ஊழியர்களுக்கும் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.**

ஊழியர்களுக்கு நன்றியை தெரிவித்த பிறகு இன்று நான் வழக்கத்திற்கேற்ப ஏற்கனவே கூறப்பட்டு வரும் குத்பாவின் தலைப்பின் பக்கம் செல்லலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால் உலகம் முழுவதிலிருந்தும் மாநாட்டைக் கேட்டவர்கள் அதன் தாக்கங்களை குறித்தும், அபிப்ராயத்தைக் குறித்தும் எந்த அளவுக்கு அசாதாரணமாக உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளார்கள் என்றால், இவ்வருடமும் எப்பொழுதும் போல் அந்த தாக்கங்களைக் குறித்தும், அருள்களைக் குறித்தும் இன்றைய குத்பாவில் எடுத்துரைக்கலாம் என்று நான் தீர்மானம் செய்து விட்டேன்.

இவ்வருடம் தனித்துவமான ஏற்பாட்டுடன் மாநாடு நடந்தது. அது அல்லாஹ்வுடைய அருளின் எவ்வாறான வாசல்களை திறந்துள்ளன என்றால், அதைக் கண்டு மனிதன் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவாறு அவனுக்கு முன்னால் குனிந்துகொண்டே செல்கிறான். இந்த அனைத்து விதமான சூழ்நிலைகள் இருந்தபோதிலும் அல்லாஹ் ஜமாஅத்தின் மீது இந்த அளவு அருள்களை பொழிந்து கொண்டிருக்கின்றான்! **மக்கள் பொதுவாக ஒரு பற்றாக்குறையை சுட்டிக்காட்டினார்கள். அது என்னவென்றால், இவ்வருடம் உலகளாவிய பைஅத் நடைபெறவில்லை என்பதாகும். அதற்கு அவர்கள் அதிகமாக காத்திருந்தார்கள். எவ்வாறிருப்பினும் இவ்வாறான சூழ்நிலையில் பைஅத் நிகழ்ச்சி நடைபெறுவது என்பது மிக கஷ்டமான வேலையாகும். கட்டாய சூழல் இருந்தது.**

**இவ்வருடம் முதல் முறையாக லைவ் ஸ்ட்ரீமிங் மூலமாக பல்வேறு ஜமாஅத்துகள் தத்தமது இடங்களில் இருந்தவாறே மாநாட்டில் கலந்துகொண்டன.** யூ.கே வில் ஐந்து இடங்களில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. UK வை தவிர 22 நாடுகளில் 37 இடங்களில் லைவ் ஸ்ட்ரீமிங் மூலமாக மக்கள் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டார்கள். அவற்றில் அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, இந்தோனேசியா, பங்களாதேஷ், மொரீஷியஸ், கபாபிர், இந்தியா, புர்கினாபாசோ, கானா, நைஜீரியா, கேம்பியா, தன்சானியா, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, ஸ்வீடன், பெல்ஜியம், ஃபின்லாந்து, ஹாலந்து போன்ற நாடுகள் அடங்கும். ஒரு மதிப்பீட்டின்படி, பெண்களுடைய அமர்வையும் 30, 35 ஆயிரம் பெண்கள் கண்டார்கள்; கேட்டார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உலகம் முழுவதிலுமுள்ள பல்வேறு ஆண்கள், பெண்கள் ஆகியோரின் தாக்கங்களை எடுத்துரைத்தார்கள். ஒரு ஜப்பானிய நண்பர் முஷீமா ஒசாமோ சாஹிப் - ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள்* **ஜப்பான்** *சுற்றுப் பயணம் சென்ற போது ஹுஸூர் அவர்களை உபசரிக்கும் நற்பேறும் பெற்றார்.* அவர் **கூறுகிறார்:** நான் இன்று ஆகஸ்ட் 6 ஆம் தேதிய குத்பாவை கேட்டேன். அதை கேட்ட போது ஜப்பானுக்காக

அஹ்மதிய்யா ஜமாஅத் செய்த தொண்டுகள் எனக்கு ஞாபகத்திற்கு வந்து விட்டன. இன்று மாநாட்டின் சூழ்நிலையையும், உலகெங்கிலும் மக்கள் கூட்டாக அமர்ந்து பார்க்கக்கூடிய காட்சியையும் கண்ட பிறகு என்னுடைய உள்ளத்தில் மேலோங்கும் என்ற எண்ணம் என்னவென்றால், உலகை ஒரு தளத்தில் ஒன்று திரட்டுவதற்காகவும், உலகில் அமைதி, சமாதானத்தை நிலைநாட்டுவதற்காகவும் அஹ்மதிய்யா ஜமாஅத் எந்த அளவு முக்கியமாக அங்கம் வகிக்கிறது! என்று சிந்திக்கிறேன்.

**சேம்பியா**வில் ஒரு கிறிஸ்தவ ஆசிரியர் மாநாட்டின் நிகழ்ச்சிகளைக் கண்ட பிறகு கூறுகிறார்: இஸ்லாம்தான் உண்மையான மார்க்கம் என்று இன்று நான் அறிந்து கொண்டேன். **நைஜீரியா**வைச் சார்ந்த ஜமாஅத் அல்லாத ஒரு நண்பர், கடும் மழையில் தன்னார்வலர்கள் பணியில் மூழ்கி இருப்பதைக் கண்டு கூறினார்: நிச்சயமாக இது உண்மையாளர்களின் ஜமாஅத் ஆகும். **லுசாக்கா சேம்பியா**வில் இருந்து ஜமாஅத் அல்லாத ஆசிரியர் ஒருவர் கூறுகிறார்: இன்று நான் உங்களுடைய கலீஃபாவிடமிருந்து ஒரு விஷயத்தைக் கற்றுக் கொண்டுள்ளேன். அது என்னவென்றால், இஸ்லாம் மட்டுமே பெண்களுடைய உரிமைகளை வலியுறுத்துகின்ற ஒரே மார்க்கம் ஆகும்.

**நைஜரிலிருந்து** ஒரு அஹ்மதியல்லாத விருந்தினர் மர்யம் சாஹிபா கூறுகிறார்கள்: இன்று பெண்களுக்குரிய உரிமைகள் மற்றும் பொறுப்புகள் ஆகிய இந்த இரண்டு விஷயங்களைப் பற்றிய உண்மையான புரிதல் எனக்கு கிடைத்துள்ளது. மேலும் கூறுகிறார்: அஹ்மதிகளின் செயல்கள் அவர்களுடைய சொல்லுக்கு ஏற்றால் போல் உள்ளது. உங்களை விட சிறந்தவர்களை நான் கண்டதில்லை.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* ஆகவே ஒவ்வொரு அஹ்மதிகளும் தமது வீடுகளில் இந்த போதனையின் முன் உதாரணங்களை நிலை நாட்ட வேண்டும். இஸ்லாத்தின் இந்த உண்மையான போதனை மக்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. உங்களுடைய முன்னுதாரங்கள் மூலமாக அது நிலைத்திருக்கவும் வேண்டும். இது அஹ்மதி ஆண்களுக்கு மிகவும் சிந்திக்கத் தக்க தருணமாகும்! உங்களது நடவடிக்கைகளை உங்களது வீடுகள் நீங்கள் சரி செய்து கொள்ளுங்கள். உலகை ஏமாற்ற வேண்டாம்.

**கேமரூனுடைய** மர்வா எனும் நகரத்திற்கு அருகில் ஒரு கிராமம் உள்ளது. அதனுடைய chief அல்ஹாஜ் உஸ்மான் சாஹிப் ஆவார். அவர் கூறுகிறார்: இன்று மாநாட்டினுடைய நிகழ்ச்சிகளைப் பார்த்த பிறகு இந்த ஜமாஅத் உண்மையிலேயே இமாம் மஹ்தியுடைய ஜமாஅத் ஆகும் என்ற உறுதி வந்துவிட்டது.

**மலேசியா**வைச் சார்ந்த ஒரு புதிய அஹ்மதி கூறுகிறார்: யூ.கே ஆண்டு மாநாட்டை பார்த்த பிறகு நான் இறைவனுக்கு அதிகமாக நன்றி கூறுகிறேன். கிலாஃபத்துடன் எப்பொழுதும் விசுவாசத்துடனும், கீழ்ப்படிந்தும் இருப்பேன் என்று நான் வாக்குறுதியளிக்கிறேன்.

**கினி-பிசாவு** உடைய புதிய அஹ்மதிகளும், ஜமாஅத் அல்லாத அஹ்மதிகளும் மாநாட்டின் நிகழ்ச்சிகளைக் காண்பதற்காக 18 கிலோமீட்டர், 30 கிலோமீட்டர் தூரத்தை சைக்கிளிலோ அல்லது நடந்தோ கடந்து அங்கு வந்திருந்தனர். அந்த சந்தர்ப்பத்தில் 127 நபர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக்கொண்டனர். ஒட்டுமொத்த அளவில் பைஅத் நடந்தது.

**காங்கோ**வைச் சார்ந்த ஒரு கிறிஸ்தவ நண்பர் மாநாட்டைப் பார்த்தபிறகு தமது மனைவியிடம், இங்கு நாம் மூன்று நாட்களில் எவற்றை கற்றுக் கொண்டோமோ அவற்றை கிறிஸ்தவத்திலிருந்து கொண்டு வாழ்க்கை முழுவதிலும் நம்மால் கற்றுக்கொள்ள இயலாது என்று கூறினார்.

***கினி-பிசாவு** உடைய அஹ்மதியல்லாத நண்பர் ஒருவர் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்ட பிறகு கூறினார்:* “இஸ்லாத்திற்கு தற்போது ஒரு லீடரின் தேவை உள்ளது. அஹ்மதிய்யா ஜமாஅத்திடம் கலீஃபாவின் தோற்றத்தில் அவர் உள்ளார்.” அவர் மாநாடு நிறைவடைந்த உடனேயே பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில்

இணைந்து விட்டார். **ஏமனில்** இருந்து அக்ரம் அலீ சாஹிப் கூறுகிறார்கள்: காலத்தின் கலீஃபா அவர்கள் பெண்களுக்கு ஆற்றிய உரையை முழு சமூகமும் கேட்டால், அதன்படி செயல்பட்டால் முழு சமூகமும் 100% சீரடைந்து விடும்.

*சுருக்கமாக, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நைஜர், கேம்பியா, காபோன், நைஜீரியா, கினி கனாக்ரி, கேமரூன், மாலி, தன்சானியா, மலேசியா, பிரேசிலில், கினி-பிசாவு, கயானா, மொரீஷியஸ், ஆஸ்திரியா, ஐவரி கோஸ்ட், காங்கோ பிராஸ்வில்லே, செனிகால், ஏமன், ஜோர்டன், சிரியா, ஜெர்மனி, இந்தோனேசியா, கிர்கிஸ்த்தான், ஆஸ்திரேலியா, குவாட்டா மாலா, அல்பானியா போன்ற நாடுகளிலிருந்து தத்தமது இடங்களில் MTA அல்லது இதர ஊடகங்களின் மூலமாக மாநாட்டின் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பயனடைந்த அஹ்மதி ஆண்கள், பெண்கள் மற்றும் ஜமாஅத் அல்லாதவர்களின் பல்வேறு தாக்கங்களைக் குறித்து எடுத்துரைத்தார்கள். உலகின் பல்வேறு பகுதிகளில், இடங்களில் குடியிருக்கின்ற பல்வேறு நிற, இன மக்கள் மற்றும் பல்வேறு மொழி பேசுகின்ற ஆண்கள், பெண்கள் அனைவரும் மாநாட்டின் ஒழுங்கமைக்கப்பட்ட ஏற்பாடு, ஆன்மீக சூழல் மற்றும் ஹுஸூர் அவர்களின் ஞானமிக்க, தாக்கத்தை ஏற்படுத்திய குத்பாக்களிலிருந்து ஒரேபோன்று பயனடைந்த குறிப்பை எடுத்துரைத்தார்கள். அத்துடன், மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட ஈமானை வலுப்படுத்தும் சில சம்பவங்களையும் எடுத்துரைத்தார்கள்.*

ஆண்டு மாநாட்டின்போது, **யூ.கே பிரதமர், கனடா பிரதமர், பல்வேறு அமைச்சர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் சார்பாகவும் வாழ்த்துச் செய்திகள் கிடைத்தன.** அவ்வாறே பிரிட்டன் மட்டுமின்றி 9 நாடுகளிலிருந்து 109 வாழ்த்துச் செய்திகள் கிடைத்துள்ளன. அவற்றில் அமெரிக்கா, சியேரா லியோனி, கேம்பியா, செனிகால், கென்யா, ஸ்பெயின், ஹாலந்து, ஜெர்மனி போன்ற நாடுகள் அடங்கும்.

அல்லாஹ்வுடைய அருளால் MTA ஆப்பிரிக்கா மட்டுமின்றி இன்னும் சில உள்ளூர் டிவி சேனல்களும் ஆண்டு மாநாட்டினுடைய நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்தன. ஆபிரிக்காவில் 50 மில்லியனை விடவும் அதிகமான மக்கள் பேசக்கூடிய ஹாவுஸா மொழியில் முதன்முறையாக மொழியாக்கம் செய்யப்பட்டது. ஆப்பிரிக்காவின் 16 பல்வேறு டிவி சேனல்கள் யூ.கே ஆண்டு மாநாடு தொடர்பாக செய்திகளை ஒளிபரப்பு செய்துள்ளன. BBC south -ம் ஆண்டு மாநாடு தொடர்பாக ஒரு டாக்குமென்டரியையும் ஒளிபரப்பு செய்துள்ளது. BBC வேர்ல்டும் அறிக்கையை ஒளிபரப்பு செய்துள்ளது

40 வெப்சைட்டுகள் மாநாட்டினுடைய செய்தியை ஒளிபரப்பு செய்துள்ளன. மாநாடு தொடர்பாக 16 ரேடியோ புரோகிராம்கள் ஒலிபரப்பு செய்யப்பட்டுள்ளன. 20 செய்தித்தாள்களில் மாநாடு குறித்த கட்டுரைகள் போன்றவை வெளியாகியுள்ளன. 12 டிவி சேனல்கள் மாநாட்டினுடைய செய்தியை ஒளிபரப்பி உள்ளன. இந்த அனைத்து வழிமுறைகள் மட்டுமின்றி, சோசியல் மீடியா மூலமாகவும் ஏறக்குறைய 63 இலட்சம் நபர்கள் வரை செய்தி சென்றடைந்துள்ளது. பங்களாதேஷ் உடைய 10 online porters மற்றும் செய்தித்தாள்களில் மாநாட்டினுடைய நிகழ்ச்சிகள் புகைப்படத்துடன் வெளியாகியுள்ளன. Youtube ல் 15 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் விசிட் செய்திருக்கிறார்கள். இன்ஸ்டாகிராமில் 35 ஆயிரம் மக்கள் MTA உடைய page ஐ பார்த்திருக்கிறார்கள். 1.97 மில்லியன் மக்கள் வரை இது சென்றடைந்திருக்கிறது. Twitter ல் ஒரு இலட்சத்தையும் விட அதிகமான மக்கள் MTA உடைய page ஐ பார்த்திருக்கிறார்கள். ஃபேஸ்புக் மூலமாகவும் ஐந்தரை இலட்சம் மக்கள் வரை தூதுச் செய்தி சென்றடைந்திருக்கிறது. அவ்வாறே, MTA உடைய வெப்சைட் -ம் ஒரு இலட்சம் முறை பார்க்கப்பட்டுள்ளது. MTA on demand மூலமாகவும் இரண்டு இலட்சத்தை விடவும் அதிகமான மக்கள் மாநாட்டை பார்த்திருக்கிறார்கள்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் துஆ செய்தார்கள்:* அல்லாஹ் இந்த மாநாட்டினுடைய நீண்ட கால தாக்கங்களையும் வெளிப்படுத்துவானாக! அஹ்மதிய்யத் எனும் உண்மை இஸ்லாத்தின் பக்கம் நல்ல ஆன்மாக்களுக்கு முன்பைவிட அதிக கவனம் தோன்றட்டுமாக! பெயர்தாங்கி ஆலிம்களுடைய தீமையிலிருந்து ஜமாஅத்தையும், அனைத்து நல்ல ஆன்மாக்களையும் அல்லாஹ் பாதுகாப்பானாக. ஆமீன்!

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**